




மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழக அரசு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகப் பணிகள் குறித்தும் ஆய்வு நடத்தினார். அதனை தொடர்ந்து தண்ணீரை சேமிக்கும் முறைகள் / குடிநீர் சிக்கனம் குறித்த விழிப்புணர்வு விளம்பர கையேட்டினை வெளியிட்டார்.



மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழக அரசு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகப் பணிகள் குறித்தும் ஆய்வு நடத்தினார். அதனை தொடர்ந்து தண்ணீரை சேமிக்கும் முறைகள் / குடிநீர் சிக்கனம் குறித்த விழிப்புணர்வு விளம்பர கையேட்டினை வெளியிட்டார்.

**செய்தி வெளியீடு எண்.16/2017 நாள் 09.03.2017**

**தமிழகத்தில் நகர்ப்புர மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.**

*******

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழக அரசு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகப் பணிகள் குறித்தும் சென்னை

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் இன்று (9.03.2017) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் நகர்ப்புர மற்றும் ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகப் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாகத்துறை, பேரூராட்சிகள் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகள் மற்றும் 12524 ஊராட்சிப் பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம், அவற்றின் அளவு மற்றும் நீர் இருப்பு குறித்தும் பருவமழை பொய்த்ததால் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் தனித்தனியாக விரைவாக ஆய்வு மேற்கொண்டார்.

<u>**சென்னை மாநகரம்**</u>

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், கோடை காலத்தில் பொது மக்கள் பாதிக்காத வகையில் குடிநீர் வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் அலுவலர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

- சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் மொத்த கொள்ளளவான **12,522** மில்லியன் கன அடியில் நாளது தேதியில், **1,629** மில்லியன் கனஅடி நீர் மட்டுமே அதாவது 13% மட்டுமே இருப்பில் உள்ளது. கடந்த ஆண்டில் இதே தேதியில் 7,705 மில்லியன் கனஅடி நீர் இருப்பு இருந்தது.

- மீஞ்சூர் மற்றும் நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து நாளொன்றுக்கு தலா 100 **MLD** குடிநீர் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

- பருவமழை பொய்த்ததன் காரணமாக அனைத்து ஏரிகளிலும் நீர் இருப்பு குறைந்த அளவே இருந்த போதிலும் தற்போதுள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் உள்ளிட்ட குடிநீர் ஆதாரங்கள் மூலம் **நாளொன்றுக்கு 550 மில்லியன் லிட்டர்** குடிநீர் அளவு வழங்கப்பட்டு வருகிறது.

- **சென்னை மாநகரின் கோடை கால குடிநீர்த் தேவையை சமாளிக்க 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

  - நெய்வேலி சுரங்கங்களிலிருந்து நேரடியாகவும், பரவனாரு ஆற்றிலிருந்து வீராணம் குழாய்களின் மூலமாகவும் மற்றும் கடிலம் பகுதியிலுள்ள ஆழ்துளை கிணறுகளிலிருந்தும் நாளொன்றிற்கு 85 மில்லியன் லிட்டர் பெறுவதற்கு திட்டமிடப்பட்டு தற்போது 60 மில்லியன் லிட்டர் சென்னைக்கு விநியோகிக்கப்படுகிறது.

  - கடிலம் பகுதியிலுள்ள 30 ஆழ்துளை கிணறுகளிலிருந்து 21 கிணறுகள் புனரமைக்கப்பட்டு 25 மில்லியன் லிட்டர் சென்னைக்கு வீராணம் குழாய்களின் மூலம் விநியோகிக்கப்படுகிறது. மீதமுள்ள 9 ஆழ்துளை கிணறுகளை புனரமைக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

  - திருவள்ளூர் மாவட்டம், பூண்டி மற்றும் தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள விவசாய கிணறுகளை வாடகைக்கு அமர்த்தும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இன்றைய தேதியில்,

240 விவசாய கிணறுகளிலிருந்து நாளொன்றுக்கு 83.60 மில்லியன் லிட்டர் அளவிற்கு நீர் எடுக்கப்பட்டு வருகின்றன.

- சென்னை மாநகரில் ஏற்கனவே, 6,000, 9,000 மற்றும் 16,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 520 லாரிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 40 இடங்களில் உள்ள 181 நீர் நிரப்பும் அமைப்புகள் மூலம் லாரிகளில் குடிநீர் நிரப்பப்படுகிறது. தற்போது கூடுதலாக 13 நீர் நிரப்பும் அமைப்புகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

- கோடைகால குடிநீர்த் தேவையை சமாளிக்க மேலும் 100 லாரிகளை வாடகைக்கு அமர்த்த துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் 4,200 லாரி நடைகளின் எண்ணிக்கை 6,500 நடைகளாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது, 5300 நடைகளாக அதிகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

- தற்போது சென்னை மாநகரில் உள்ள 10,500 பிளாஸ்டிக் குடிநீர் தொட்டிகளுடன், கூடுதலாக 660 புதிய பிளாஸ்டிக் தொட்டிகள் நிறுவ திட்டமிடப்பட்டு 90 தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. மீதமுள்ள தொட்டிகளை நிறுவும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மேலும், பழுதடைந்த 950 பிளாஸ்டிக் குடிநீர் தொட்டிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

- பழுதடைந்துள்ள 237 இந்தியா மார்க் 2 பம்புகள் புனரமைக்கப்பட்டுள்ளன. புதிதாக 75 எண்ணிக்கையிலான புதியதாக நிறுவும் பணிகள் நடைபெற்ற வருகின்றன. இது வரையில் 19 பம்புகள் நிறுவப்பட்டுள்ளன.

- சென்னை மாநகருடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிலத்தடி நீரின் தன்மைக்கேற்ப புதிதாக தேவைப்படும் ஆழ்துளை கிணறுகள் நிறுவுவதற்கு ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சோழவரம், செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளின் கடைநீர் இருப்பில் **(Dead storage)**, மொத்தம் 443 மில்லியன் கன அடி நீரை உபயோகிக்க ஏதுவாக பம்ப்செட்டுகள் மூலம் இறைத்து சென்னை மாநகருக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

- சிக்கராயபுரத்தில் உள்ள 22 உபயோகப்படுத்தாத குவாரிகளிலுள்ள சுமார் 3000 மில்லியன் லிட்டர் நீரை செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான குழாய்கள் பதித்தல் மற்றும் பம்புகள் அமைப்பதற்கான பணிகளுக்கு ரூ. 11.80 கோடி திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

- சென்னையைச் சுற்றியுள்ள போரூர் ஏரி, இரட்டை ஏரி, திருநீர் மலை ஏரி, மணிமங்களம் ஏரி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள தென்னேரி ஆகிய ஏரிகளில் தற்போதுள்ள நீரை சென்னை நகரின் தேவைக்கு பயன்படுத்துவதற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

**<u>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்</u>**

தமிழகத்தின் இதர பகுதிகளில் வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அலுவலர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 547 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
- 8 மாநகராட்சிகள், 66 நகராட்சிகள், 323 பேரூராட்சிகள், 46,438 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 4.18 கோடி மக்கள் பயன்பெறும் வகையில்

நாளொன்றுக்கு 2,061 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டு, தற்சமயம் நாளொன்றுக்கு 1,493 மில்லியன் லிட்டர் வழங்கப்பட்டு வருகிறது.

**கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கும் திட்டம்.**

1. தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு 642 பணிகள் ரூ.30.63 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 237 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2. மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ், 238 பணிகள் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 34 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன .

3. தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ் வருடாந்திர செயல் திட்டப் பணிகள் (608 புனரமைப்பு பணிகள்) ரூ.36.77 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 148 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

4. வறட்சி நிவாரண பணிகளுக்காக கூடுதலாக ரூ.11.17 கோடி மதிப்பீட்டில் 410 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்**

- சென்னை தவிர்த்த மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வறட்சியினால் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க மாநில பேரிடர் நிவாரண நிதி மூலம் 30 கோடி ரூபாய் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி மூலம் 35.35 கோடி ரூபாய் என மொத்தம் ரூ.65.35 கோடியில் மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் இம்மாத இறுதிக்குள் முடிவடையும்.

- வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு, குடிநீர் லாரிகள் மூலம் 10 மாநகராட்சிகள் மற்றும் 68 நகராட்சிகளில், 189 நகராட்சி லாரிகள், 167 தனியார் வாடகை லாரிகள் மூலம் தினமும் 15 மில்லியன் லிட்டர் அளவிற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

- சென்னை தவிர்த்த மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில், கைபம்புடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், சிறு மின்மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், ஆழ்துளை கிணறுகள்/நீர் உறிஞ்சி கிணறுகளை புனரமைப்பு செய்தல் உள்ளிட்ட 1,337 வறட்சி நிவாரணப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 823 பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**<u>பேரூராட்சிகள்</u>**

- மொத்தம் 528 பேரூராட்சிகளில், 465 பேரூராட்சிகளில் நாள்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

- 60 பேரூராட்சிகளில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும், 3 பேரூராட்சிகளில் (சேத்தூர், ஆண்டிபட்டி, நிலக்கோட்டை) மூன்று நாட்களுக்கு ஒருமுறையும் குடிநீர் வழங்கப்படுகிறது.

- இந்த 3 பேரூராட்சிகளில் ரூ.15.65 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் முடிவுற்றதும், இப்பேரூராட்சிகளில் நாள்தோறும் குடிநீர் விநியோகிக்கப்படும்.

**<u>வறட்சி நிவாரணப்பணிகள்</u>**

- குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க பேரூராட்சியின் பொது நிதி மற்றும் மாநில பேரிடர் நிவாரண நிதி ரூ.15 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.46.41 கோடி மதிப்பீட்டில் 3595 பணிகள் எடுக்கப்பட்டு, அதில் நாளது வரையில் 1330 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

**<u>ஊரக பகுதிகள்</u>**

- 12524 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில், 547 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் தனி குடிநீர் திட்டங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளால், மொத்தம், 1.10 இலட்சம், விசைப்பம்புகள், 1.17 லட்சம் சிறு மின்விசைப் பம்புகள், 2.03 லட்சம் கைபம்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

- மொத்தமுள்ள 12524 கிராம ஊராட்சிகளில், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில் உள்ள 6675 கிராம ஊராட்சிகளில் சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- கோடைக்காலத்தில் ஏற்படும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கி, போதிய அளவில் குடிநீர் வழங்கும் பொருட்டு, விசைப் பம்புகளில் உள்ள மின் மோட்டார் திறனை அதிகரித்தல், ஆழ்துளை குழாய் கிணறுகளை சுத்தப்படுத்துதல் மற்றும் ஆழப்படுத்துதல், புதிய ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்தல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட நீராதார புனரமைப்பு பணிகள் **ரூ.703.43 கோடி** மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மொத்தம் அனுமதிக்கப்பட்டுள்ள 8874 பணிகளில், 4271 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4603 பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

- மேலும், குடிநீர் பற்றாக்குறை நிலவும் ஊரகப் பகுதிகளில் மத்திய மற்றும் மாநில நிதிக்குழு மானியம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பொது நிதி ஆகியவற்றை குடிநீர் விநியோக பணிகளுக்குப் மட்டும் பயன்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ஜனவரி–2017 மற்றும் பிப்ரவரி–2017 மாதங்களில் மத்திய மற்றும் மாநில நிதிக்குழு மானியம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களின் கீழ் மொத்தமாக ரூ.1064.09 கோடி கிராம ஊராட்சிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை குடிநீர் விநியோக பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- ஊரகப் பகுதிகளில், அனைத்து மாவட்டங்களிலும் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர்ப்பணிகள் மேற்கொள்ள மாநில பேரிடர் நிவாரண நிதி ரூ.15.00 கோடி செலவினத்தில் சீரான குடிநீர் விநியோகம் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் உள்ள 12 மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் கோடை கால குடிநீர்த் தேவையை சமாளிக்க மொத்தம் சுமார் **ரூ.973.76 கோடி** மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், பழைய ஆழ்துளை கிணறுகளை புதுப்பித்தல், லாரிகள் மூலம் குடிநீர்

வழங்குதல், பழுதடைந்த மோட்டார்கள் மாற்றுதல், மின் ஆக்கிகள் வாடகைக்கும், புதிதாகவும் வாங்குதல், கைபம்புகள் நிறுவுதல், பைப்லைன் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் மாநகராட்சி பொறியாளர்கள், நகராட்சி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் ஆகியோர் தங்கள் பகுதிகளில் குடிநீர் வழங்கல் பணிகளை காலை 6.00 மணி முதல் நேரில் ஆய்வு செய்தும் மாலையில் அனைத்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டும் குடிநீர் வழங்கல் பணிகளை சிறப்புக் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதனை துறையின் உயர் அலுவலர்கள் நேரில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

பருவ மழை பொய்த்ததன் காரணமாக கோடை காலத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க பொது மக்கள் அனைவரும் குடிநீரை வீணாக்காமல் சிக்கனமான முறையில் பயன்படுத்த வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கி, மேலும் பொது மக்கள் குடிநீரை மிகவும் சிக்கனமான முறையில் குடிநீர் பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்த ஊடகங்கள் மற்றும் செய்தித் தாள்கள் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியதுடன் குடிநீர் விழிப்புணர்வு குறித்த விளம்பர கையேடுகளையும் வெளியிட்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி,இஆப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு ஹன்ஸ்ராஜ் வர்மா,இஆப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அருண்ராய்,இஆப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷணம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறையின் இயக்குநர் திரு கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் இயக்குநர்கள் மற்றும் பொறியாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை ஆணையர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், அனைத்து மாநகராட்சிகளின் ஆணையர்கள் மற்றும் மாநகரப் பொறியாளர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பொறியியல் இயக்குநர் மற்றும் பகுதி பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர்கள், அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்